## வனத்துறை நடத்தும் பழங்குடி மாணவர் பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுக்கு ரூ.8 கோடி!

## வன – இயற்கைப் பாதுகாப்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த 1000 ‘இயற்கை முகாம்கள்!’

# கிருஷ்ணகிரியில் மனித - யானை மோதலைத் தவிர்க்க - ரூ.31 கோடியில் எஃகு கம்பி வேலி!

## சட்டப்பேரவையில் – கதர் – வனத்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் க.பொன்முடி முக்கிய அறிவிப்புகள்!

**சென்னை, மார்ச். 30-**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் ‘கதர்’ மற்றும் ‘வனம்’ ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றிய வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, “கிருஷ்ணகிரியில் மனித - யானை மோதலைத் தவிர்க்க - ரூ.31 கோடியில் எஃகு கம்பி வேலி அமைக்கப்படும்” என்பது உள்ளிட்ட “வனம்” தொடர்பான 19 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் - முனைவர் க.பொன்முடி ஆற்றிய பதிலுரை வருமாறு:-

திராவிடத்தைத் தந்த தந்தை பெரியார் அவர்களையும், அவர் வழியில் ஆட்சி செய்து, அரசியலை இயக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களையும், அவர்கள் இருவருடைய வழியிலே தமிழகத்தின் வளர்ச்சிக்கு காரணமாக இருந்து, நூற்றாண்டு விழா காணும் தலைவர் கலைஞர் அவர்களையும் வணங்குகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய வழியிலே இன்று ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற கலைஞர் அவர்கள்தான் எங்களையெல்லாம், இங்கே இருக்கின்ற அண்ணன் முனைவர் துரைமுருகன் அவர்களிடமிருந்து, இங்கே இருக்கின்ற நான் உட்பட, இ.பெரியசாமி, எ.வ.வேலு போன்றவர்களை உருவாக்கி, வளர்த்தெடுத்தவர். முதலில் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கலைஞர் காலத்திலிருந்தே இளைஞர்களை ஈட்டி முனைகளாகத் தீட்டி, மிகச் சிறப்பாக இளைஞர்களை வழிநடத்திய எங்கள் அன்பிற்குரிய, அன்று முதல் இன்று வரை அரசியலிலும் சரி, கட்சியிலும் சரி, அனைத்திலும் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற எங்கள் தமிழகத்தினுடைய முதல்வர் அன்பிற்குரிய தளபதி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**புலிக்கு பிறந்தது பூனையாகுமா?**

புலிக்கு பிறந்தது பூனையாகுமா என்பதைப் போல இந்த இளைஞர்களை ஈட்டி முனைகளாகத் தீட்டி வருகின்ற எங்கள் ஆற்றல் மிக்க இளைஞர் அணியினுடைய செயலாளரும், துணை முதலமைச்சருமான அன்பிற்குரிய உதயநிதி அவர்களையும் வணங்குகிறேன். எங்களுடைய மூத்த அமைச்சர்கள் அன்பிற்குரிய இ. பெரியசாமி, தள.வ. வேலு உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், இங்கே அமர்ந்திருக்கின்ற எதிர்க்கட்சித் தோழர்களுக்கும் இங்கேயிருக்கின்ற என்னுடைய கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தோழமைக் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், இங்கே இருக்கின்ற நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். வனத் துறையைப் பற்றி நான் அதிகமாக சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பெரும்பாலும் இரண்டு அல்லது மூன்று முக்கியமான விஷயங்கள்தான் இருக்கின்றன. நீங்கள் அனைவரும் வனத்துறை பற்றி பேசுகின்றபோது, சுட்டிக்காட்டியது வன விலங்குகளினால் விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற ஆபத்துகள், அதேபோல, வன விலங்குகளையும், நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த நான்கு ஆண்டுகளில் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும், வனம் என்றாலே இயற்கை தான். அதைத்தான் முதலிலே நாம்,

“பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.”

என்று திருக்குறள் சொல்லியிருக்கிறது. அந்த திருக்குறளின் அடிப்படையில்தான் இயற்கையும் வளர வேண்டும், வன விலங்குகளும் வளர வேண்டும். அதனால் விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படக்கூடாது என்ற அடிப்படையில்தான் தமிழக முதலமைச்சர் அவர்கள், தளபதி அவர்கள், கடந்த நான்கு ஆண்டுகளிலே பல்வேறு சிறப்பான திட்டங்களை இதன்மூலமாக தீட்டியிருக்கிறார். சங்ககால இலக்கியத்திலே எப்படி இந்தப் பகுதிகளுடைய வளர்ச்சிகளெல்லாம், குறிப்பாக இங்கே இருக்கின்ற பல்வேறு பகுதிகளுடைய வளர்ச்சிகள் எல்லாம் இயற்கை வளமாக இருந்தாலும், சங்க காலத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றன. வன விலங்குகளெல்லாம் நம்முடைய பகுதிகளில்தான் அதிகம் இருந்திருக்கிறது. இயற்கை வளமும் நம்முடைய தமிழகத்தில்தான் அதிகம் இருந்திருக்கிறது.

அவையெல்லாம் தொடர வேண்டுமென்பது தான் தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களுடைய நோக்கமாக இருந்தது. 4 ஆண்டுகளில் இவற்றையெல்லாம் எப்படி வழங்க வேண்டும், வளர்க்க வேண்டும் என்பதற்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தியிருப்பவர் தமிழக முதலமைச்சர் தளபதி அவர்கள். தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பை முழுமையாகப் படித்தால், 4 ஆண்டுகளில் என்னென்ன செய்துள்ளோம் என்பது தெரியும். அதை நீங்கள் படித்தீர்களோ இல்லையோ, நான்கூட அவ்வளவு படித்திருக்க மாட்டேன், ஆனால், உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் முழுமையாகப் படித்துவிட்டு, அதிலிருந்த அனைத்தையும் அவைமுன் எடுத்து வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 4 ஆண்டுகளில் இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்பதை மிகச் சிறப்பாக இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக இந்த 4 ஆண்டுகளில், பல வித வன விலங்குகளைப் பாதுகாக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்துள்ளது. தற்போது தமிழ்நாட்டில் 26,450.22 சதுர கிலோ மீட்டர் அளவிற்கு வனப் பரப்பு இங்கு இருக்கிறது. இந்தப் புள்ளிவிவரங்கள் உட்பட அனைத்தையும் உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். எனவே, அவற்றையெல்லாம் மீண்டும் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன்.

பல்வேறு நிலங்கள். ஈர நில இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. மரகதப் பூங்காக்களை எடுத்துக்கொண்டால் இதுவரை 83 மரகதப் பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் 17 மரகதப் பூங்காக்களை உருவாக்கும் பணிகள் முன்னேற்றத்தில் இருந்து கொண்டிருக்கின்றன.

மேலும், இந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வன உயிரினங்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. புலிகளின் எண்ணிக்கை 266 லிருந்து 306 ஆக உயர்ந்திருக்கிறது. யானைகளின் எண்ணிக்கை 2,900லிருந்து 3,062 ஆக உயர்ந்திருக்கிறது. பெருங்கழுகுகள் எண்ணிக்கை 106லிருந்து 157 ஆக உயர்ந்திருக்கிறது. இவ்வாறு, இந்த 4 ஆண்டுகளில் வன விலங்குகளின் எண்ணிக்கையும், பறவைகளின் எண்ணிக்கையும் உயர்ந்திருப்பதோடு, நம்முடைய இயற்கை வளமும் உயர்ந்திருக்கிறது. ஈர நிலங்களெல்லாம் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, கிராமங்களில் 2 வருடங்களில் 19 ஈர நிலங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதில், இந்தியாவிலேயே முதல் இடமாக நம்முடைய தமிழ்நாடு இருக்கிறது என்பது மிகவும் முக்கியமான ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, யானைகள் காப்பகம். இதுகுறித்தும் உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்துவிட்டார்கள். நான் மறுபடியும் அதைத்தான் சொல்ல வேண்டும். வன விலங்குகள் பாதுகாப்பிற்கென யானைகள் காப்பகம், புலிகள் காப்பகம் உள்ளிட்டவை அமைக்கப்பட்டிருக்கின்றன. கோவையில் வன விலங்குகள் காப்பகம் ஒன்றை நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைப்பது குறித்து முன்னரே நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

அடுத்து, மாநில பறவைகள் ஆணையம். அதுவும் உருவாக்கப்பட்டிருக்கிறது. பறவைகள் Birds அவற்றையும் நாம் காப்பாற்ற வேண்டிய நிலைகள் இருக்கிற காரணத்தினால்தான், மாநில பறவைகள் ஆணையமும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, கடல் ஆமைகள் பாதுகாப்பு மையம். கடல் ஆமைகள் தற்போது எந்தளவிற்கு ஆபத்திற்குள்ளாகின்றன என்றெல்லாம் சமீபகாலமாக செய்திகளில் வந்து கொண்டிருக்கின்றன. கடல் ஆமைகள் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்குள்ளாக படகுகள் செல்கிறபோது அந்த ஆமைகள் கரை ஒதுங்கும். பொதுவாக, ஆமைகள், கரைக்கு வந்து குஞ்சு பொரித்துவிட்டு, குட்டிபோட்டுவிட்டு கடலுக்குள் செல்வதுதான் வழக்கம். ஆனால், அவ்வாறு செல்ல முடியாமல், படகுகள் அங்கே. (குறுக்கீடு)

**கடல் ஆமைகள் பாதுகாப்பு மையம்!**

ஆம். அதுதான். ஆமைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். அவ்வாறு முட்டைகள்கூட இடமுடியாத அளவிற்கு படகுகள் அதிகளவில் செல்கின்ற சூழ்நிலைகள் இருந்தன. எனவே, அவற்றையெல்லாம் தவிர்க்கும் வகையில், தற்போது, கடல் ஆமைகள் பாதுகாப்பு மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரில் பேசிய பெரும்பாலான உறுப்பினர்கள் வனப் பகுதியிலுள்ள சாலைகள் குறித்துதான் கேட்டார்கள். (குறுக்கீடு) உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களும் தலையாட்டுகிறார். அவரும் அதைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறார். உறுப்பினர் மணி அவர்களாக இருந்தாலும், (குறுக்கீடுகள்) மற்ற சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், அவர்கள் பெரும்பாலும் கேட்பது வனம் வழியாகச் செல்கின்ற சாலைகள்தான். அங்கு சாலைகள் அமைப்பதற்காக, அதாவது 500 கி.மீ. சாலைகளை பழுதுபார்த்து செப்பனிடுவதற்காக கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருப்பதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். பழைய சாலைகளாக இருந்தாலும் சரி, அவற்றோடு நின்றுவிடாமல் புதிதாக சாலைகள் வேண்டுமென்ற கோரிக்கையையும் பல சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்திருக்கிறீர்கள். நானும் அவைகுறித்து துறை அதிகாரிகளோடு விவாதித்திருக்கிறேன். கூடியவிரைவில் அவற்றையும் அமைத்துத் தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வனத்தைப் பொறுத்தளவில் செய்திகள் இவ்வளவுதான். மேலும், இங்கே பேசிய நண்பர்கள் குறிப்பிடுகிறபோது, குறிப்பாக சட்டமன்ற உறுப்



பினர் பி. அய்யப்பன் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்.

மண்பாண்டத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு மண்பாண்ட மின் விசைச் சக்கரங்கள் ஏற்கெனவே வழங்கும் நடவடிக்கைகள் நடைமுறையில் உள்ளன. அதேபோல, மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள தகுதியுள்ள தொழிலாளர்கள் மதுரை மண்டல இணை இயக்குநர் அவர்களைத் தொடர்புகொண்டு பயன்பெறலாம். கேள்விகேட்ட உறுப்பினர் அவர்கள் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதேபோன்று சதுரகிரி மலை குறித்தும் உறுப்பினர் அவர்கள் கேட்டீர்கள். சதுரகிரி மலைக்குச் செல்லும் பாதையில் பாலங்கள் அமைப்பது குறித்து ஒன்றிய அரசின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும், forest land போன்ற வனப் பகுதிகளில் பணிகளைச் செய்யும்போது ஒன்றிய அரசாங்கத்தின் அனுமதிதான் தேவை. நம்முடைய அன்பிற்குரிய நீர் வளத் துறை அமைச்சர் அவர்கள் காடுகள் குறித்து நல்ல அனுபவம் பெற்றவர். அவர்களுக்கு இதுபற்றி நன்றாகத் தெரியும். அதனால், ஒன்றிய அரசின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று, கல்லூத்து மலை, சித்தர் மலை, வத்தலகுண்டு, மேட்டுப்பட்டி, காப்புக் காட்டிற்குள் அனுமதியற்ற கட்டடப் பணிகள் மேற்கொள்ள தடை செய்யப்பட்டது. அந்தப் பகுதிகளில் ஏப்ரல் 4 ஆம் தேதி survey மேற்கொள்ளப் படவுள்ளது. அதன் அனுமதி குறித்து பரிசீலிக்கப்படும். இராஜபாளையத்தில் உள்ள ஐயனார் கோயிலுக்குச் செல்லும் முடங்கியாறு நீரோட்டத்தின் குறுக்கே தரைப்பாலம், நம்முடைய இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்கூட தெரிவித்தார் அங்கே அனுமதி - இதுபோன்று பல்வேறு பகுதிகளில் வனத் துறை மூலமாக அனுமதியில்லாமல் இருக்கிறது என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். நானும் அது குறித்து வனத் துறை அதிகாரிகளோடு கலந்து பேசியிருக்கிறேன். நேற்றைக்குக்கூட எல்லா. . . (குறுக்கீடு)

**20 ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கு ‘வனம்’ தொடர்பாக குறுகிய காலப் பயிற்சி அளித்து - ‘இளம் இயற்கைக் காவலர்கள்’ எனும் சான்றிதழ்கள் வழங்கப்படும்!’**

அந்தப் பகுதிகள் திருவில்லிபுத்தூர் மேக மலை புலிகள் காப்பகப் பகுதியில் அமைந்துள்ளதால், நான் முதலிலே கூறியவாறு நாம் அனுமதி கொடுப்பது மட்டுமின்றி, ஒன்றிய அரசினுடைய அனுமதி தேவைப்படுகின்ற காரணத்தால், இவைகளெல்லாம் கொஞ்சம் தாமதப்படுகின்றது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, உறுப்பினர் பிரின்ஸ் அவர்கள் இங்கே பேசும்போது குளச்சல் பகுதியில் தேனி ஆராய்ச்சி மையம் வேண்டுமென்று கேட்டார். (குறுக்கீடு)

(முனைவர் தாரகை கத்பட் அவர்கள் கையை உயர்த்திக் காட்டினார்)

நீங்கள்தான் கேட்டீர்களா! சரி. உறுப்பினர் பிரின்ஸ் அவர்கள் பேசும்போது அவர் தேனி ஆராய்ச்சி மையம் தேவை என்று கேட்டார். மார்த்தாண்டம் பகுதியில் தேனி வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் 1937 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மார்த்தாண்டம் பகுதியைச் சுற்றியுள்ள சங்க உறுப்பினர்களிடமிருந்து மலர்த் தேன் பரிசோதித்து கொள்முதல் செய்து, பதப்படுத்தப்பட்டு, அக்மார்க் சான்றிதழ் பெற்று விற்பனை செய்யப்படுகிறது. தற்போது வருடத்திற்கு 3 இலட்சம் கிலோ அளவிற்கு தேன் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆக, அந்த அடிப்படையில்தான் அதுவும் செய்யப்படுகிறது.

அதேமாதிரி உசிலம்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பி.அய்யப்பன் அவர்களும் மண்பாண்டத் தொழில் பற்றிப் பேசினார். அதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மண்பாண்ட மின் விசைச் சக்கரங்கள் ஏற்கெனவே வழங்கும் நடவடிக்கைகள் துறையில் உள்ளன என்பதையும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இந்த வனத் துறையைப் பொறுத்தவரையில் முக்கியமாக பல்வேறு பகுதிகளிலும் சாலை வழி வேண்டுமென்பதும், இருக்கிற சாலைகளை விரிவுபடுத்த வேண்டும் என்பதுதான் உங்களுடைய மிக முக்கிய கோரிக்கைகளாக இருக்கின்றன. அவைகளையெல்லாம் முடித்துக் கொடுப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதற்கு நாங்கள் காத்திருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பனைபொருள் வளர்ச்சி பற்றி உறுப்பினர்கள் பேசும்போது சொன்னார்கள். பனை பொருள் வளர்ச்சி மையத்தின் மூலமாக 32 இலட்சம் பனை விதைகள் ரூபாய் 96 இலட்சம் செலவில் அரசு தோட்டக் கலைத் துறைமூலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 350 மகளிருக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும், உபகரணமும் வழங்கப்பட்டுள்ளன. பனை வெல்லத்தை பாதுகாப்பாக இருப்பு வைத்திடவும், பனையோலைப் பொருட்களை இருப்பு வைத்திடவும், ரூபாய் 20 இலட்சம் செலவில், தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினத்தில் தொழிற்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

**கடலூரில் ரூ.7 இலட்சம் செலவில் சேமிப்புக் கிடங்கு!**

மேலும், கடலூரில் ரூபாய் 7 இலட்சம் செலவில் சேமிப்புக் கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் வாயிலாக பனைத் தொழிலாளர்களின் நலனுக்காக 10 மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் பனை பொருள் விற்பனைக் கூடங்கள் ரூபாய் 30 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. முக்கியமாக பனை மரங்கள் அதிகமாக இருக்கின்ற இடங்களில் எல்லாம் இதுதான் பிரச்சினையாக இருக்கின்றது. அதேபோல, சிறந்த நூற்பாளர், கதர் நெசவாளர் மற்றும் பட்டு நெசவாளர்களுக்கு ரொக்கப் பரிசுத் தொகையாக ரூபாய் 25 ஆயிரம் வழங்கப்பட்டு வருகின்றது. இவையெல்லாம் இந்த 4 ஆண்டுகளிலே செய்யப்பட்டிருக்கின்ற பணிகள். கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் பகுதியிலுள்ள விவசாயிகளிடமிருந்து பெறும் பச்சைத் தேனுக்கான விலை ரூபாய் 140லிருந்து ரூபாய் 155 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், Khadi Gold எனும் பெயரில் சிறுதானிய வகைகளான தினை, சாமை, வரகு, கேழ்வரகு, குதிரைவாலி மற்றும் மூங்கிலரிசி வகைகள் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. காதி பாரம்பரியம் என்னும் பெயரில் மாப்பிள்ளை சம்பா, கவுனி, தூயமல்லி போன்ற பாரம்பரிய அரிசி வகைகள் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இவையெல்லாம் காதித் துறையின்மூலம் செய்யப்பட்டிருக்கின்ற பணிகள்.

மழைக் காலத்தில் மண்பாண்டத் தொழிலாளர்கள் (குறுக்கீடு) பழங்கள் வேண்டுமாம், அவருக்கு. அதற்குத்தான் எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறோம். மண்பாண்டத் தொழிலைப்பற்றிக்கூட அவர்கள் பேசினார்கள். மழைக் காலத்தில் மண்பாண்டத் தொழிலாளர்கள் பாதிப்படைந்துவிடக்கூடாது என்பதற்காக நமது அரசால் மண்பாண்டம் செய்பவர்களுக்கு ஆண்டுதோறும் மழைக்கால பராமரிப்புத் தொகையாக ரூ.5,000 வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், 2024-2025ஆம் ஆண்டில் மட்டும் ரூபாய் 4.5 கோடி அதேவகையில் வழங்கப்பட உள்ளது. மேலும், மண்பாண்டத் தொழிலாளர்களுக்காக ரூபாய் 16.89 கோடி மதிப்பில் 7,234 மின்விசை சக்கரங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இது மண்பாண்டத் தொழிலாளர்களுக்காக. ஆகவே, கைவினைத் தொழிலாளர்கள், கைவினைத் தொழில் செய்பவர்களுக்கெல்லாம், பல்வேறு நலன்களைச் செய்ய வேண்டுமென்ற உணர்வோடுதான் இப்பணிகளெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

அடுத்து, கதர்ப் பட்டு. 2024-2025ல் ரூபாய் 354 இலட்சம் மதிப்பில் கதர்ப் பட்டு உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. கைத்தறிப் பட்டு வேறு, கதர்ப் பட்டு வேறு. அதிலும் நிறைய செய்து—(குறுக்கீடு) ஆக, இந்தத் துறையின்மூலமாகவும் பல்வேறு பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, இந்தத் துறைகளைப் பொறுத்தவரையில், இவ்வளவும் செய்திருக்கிறோம்.

வனத் துறையைப் பொறுத்தளவில், நான் முன்பே சொன்னதைப்போல பல்வேறு பணிகள் நிறைவேறி இருக்கின்றன. அவர்கள் முக்கியமாகக் கேட்பது, (குறுக்கீடு) நீங்கள் நிலத்தை விற்க வேண்டும் என்று சொல்வது வேறு. இரப்பர் மரம் விற்பது குறித்தும் நாங்கள் பேசியிருக்கிறோம். அதிகாரிகள் உங்களுடைய கோரிக்கைகள் குறித்து ஏற்கெனவே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரப்பர் மரம் வெட்டுவது. எனக்கும் அதில் கொஞ்சம் personal ஆக அனுபவம் உண்டு. இரப்பர் மரம் வெட்டுவது, அதை விற்பது போன்ற செயல்களை வனத் துறையின் மூலமாகவே செய்ய வேண்டும் என்பதில், அதிலும் குறிப்பாக வனத் துறைக்கு எந்த அளவிற்கு வருமானம் வரவேண்டுமோ அந்த அளவு வருமானம் வருவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும், அதற்கான அனுமதிகள் வழங்குவதற்கும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

வனத் துறையில் அதிகமாக விவசாயம் செய்கிறார்கள் என்று பிரின்ஸ் அவர்கள் சொன்னார். அந்த விவசாய நிலத்தையெல்லாம் மாற்றித் தர வேண்டும் என்றும் சொன்னார். ஊட்டியிலும் விவசாய நிலம் தொடர்பான இதே பிரச்சினை தான் உள்ளது. விவசாய நிலத்தை விவசாயத்திற்காகப் பயன்படுத்தினால் பரவாயில்லை. விவசாய நிலத்தை தொழிற்சாலைகளுக்கு விற்றுவிடுகிற ஒரு சூழ்நிலையும் உருவாகிவிடக்கூடாது. அந்தப் பகுதிகளில் இந்நிலை ஏற்படக்கூடாது. விவசாயத்திற்காகப் பயன்படுத்தினால் அதைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு வழிவகை செய்யப்படும். (குறுக்கீடு) வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு ஊதியத்தை உயர்த்த வேண்டும். இதில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. ஆங்காங்கே ஊதியப் பிரச்சினைகள் எல்லாம் வந்துகொண்டுதான் இருக்கின்றன. நிதிநிலைக்கேற்ப செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றைக்குக் கூட உறுப்பினர் ஒருவர் சொல்கிறபோது, விலங்குகளினால் ஏற்படக்கூடிய சேதத்திற்குக்கூட நிதியொதுக்க வேண்டுமென்று சொன்னார். ஐந்து இலட்ச ரூபாயை 10 இலட்ச ரூபாயாக உயர்த்திக் கொடுத்த ஒரே முதலமைச்சர் நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் செய்து கொடுத்தார். அதுபோல, ஏக்கருக்கு இவ்வளவு உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். அதனைப் பரிசீலிப்பதற்காக நேற்றைக்குக்கூட ஆலோசனை செய்திருக்கிறோம். வெகுவிரைவில் அதையும் உயர்த்துவ தற்கான ஏற்பாடுகள் நிதித் துறையின் அமைச்சரும் இங்கே இருக்கிறார். எனவே, நிதித் துறையுடன் கலந்தாலோசித்து ஏனென்றால் நிதித் துறைதான் நமக்கு இந்த சாலைகளைப் போடுவதற்குக்கூட 250 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அதை ஒதுக்கிக் கொடுத்தவர் நிதி அமைச்சர்தான். அவருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) அதுபோல, அவற்றையும் செய்வதற்கு நிச்சயமாக இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறையின் சார்பாக என்னுடைய அறிவிப்புகளைச் சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

**அறிவிப்புகள்**

**1. தமிழ்நாடு இருவாச்சிப் பறவை பாதுகாப்புத் திட்டம்!**

தமிழ்நாடு இருவாச்சிப் பறவை பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்படவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இருவாச்சிப் பறவைகள் பாதுகாப்பு மையம் ஒன்று ஆனைமலை புலிகள் காப்பகத்தில் அமைக்கப்படும்; இது முதலாவது அறிவிப்பு.

இருவாச்சிப் பறவைகள் பசுமைமாறா மலைக்காடுகளில் உள்ள பெரிய பூர்வீக மழைக் காட்டு மரங்களில் வாழ்வன. இந்த அரிய வகை பறவையினைப் பாதுகாக்க வனங்கள் அரசு நிலங்கள் மற்றும் தனியார் தோட்டங்களிலுள்ள மிகப் பெரிய மரங்களை அடையாளம் கண்டு பாதுகாத்து இம்மரங்களை பாதுகாக்கும் தோட்ட உரிமையாளர்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படும்.

இருவாச்சிப் பறவைகள் பாதுகாப்பு மையம் ஒன்று ஆனைமலை புலிகள் காப்பகத்தில் அமைக்கப்படும்.

**2. சிங்கவால் குரங்கு, தென்னிந்திய முள்ளெலி, கழுதைப்புலி மற்றும் செந்துடுப்பு காவேரி மீன் பாதுகாப்புத் திட்டம்!**

சிங்கவால் குரங்கு, தென்னிந்திய முள்ளெலி, கழுதைப்புலி மற்றும் செந்தடுப்பு காவேரி மீன் பாதுகாப்புத் திட்டம் 1 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சிங்கவால் குரங்கு, தென்னிந்திய முள்ளெலி, கழுதைப்புலி மற்றும் செந்துடுப்பு காவேரி மீன் ஆகியவை தமிழ்நாட்டில் காணப்படும் அரிய வகை உயிரினங்களாகும். இவற்றின் வாழிடத்தைப் பாதுகாக்கவும், ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளவும் 1.00 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**3. இயற்கை பாதுகாப்பில் முன்னோடி விருதுகள்!**

தன்னார்வத்துடன் ஈடுபடும் நபர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்கள் இயற்கை பாதுகாவலர்களாக அங்கீகரிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இயற்கை பாதுகாப்பிற்கு மரக்கன்றுகள் நடுதல், மருத்துவத் தாவரங்கள் வளர்ப்பதை ஊக்குவித்தல், வன விலங்குகளைப் பாதுகாத்தல், இயற்கை சார்ந்த விழிப்புணர்வு முயற்சிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளில் தன்னார்வத்துடன் ஈடுபடும் நபர்கள் அடையாளம் கண்டு அங்கீகரிக்கப்படுவார்கள்.

**4. இளம் இயற்கை காவலர் திட்டம்!**

இதன்மூலம் இளம் 20,000 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு ‘இளம் இயற்கை காவலர்கள்’ என்ற சான்றிதழ் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதற்காக 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்